In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : LAOP.342/2023

Deposition of CW.1

****

Name திரு.முத்துக்குமார்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 5th day of June 2026.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கின் கோரிக்கையாளர் ஆவேன். நான் என்னுடைய சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும், அவை அனைத்தும் நான் சொல்லி எனது வழக்குரைஞரால் தயாரிக்கப்பட்டதாகும். அவற்றை நான் படித்து பார்த்து கையொப்பம் இட்டுள்ளேன். அதனை எனது முதன்மை சாட்சியமாக கருத வேண்டுகிறேன்.

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களைத் தாக்கல் செய்கிறேன். அவையாவன:

18.11.2015 அன்று சிவமுருக ஆதித்யன் என்பவரிடம் நான் பெற்ற கிரையப் பத்திர ஆவணத்தின் நகல் **கோ.சா.ஆ.1,** நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது, 01.01.2000 முதல் 16.10.2025 வரையிலான வில்லங்கச் சான்றிதழ் கணினியில் எடுக்கப்பட்டது **கோ.சா.ஆ.2.**

S SUBA DEVI Digitally signed by S SUBA DEVI Date: 2026.06.05 14:56:50 +0530

மனுப்படி உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை :**

643/1 சர்வே நம்பரில் உள்ள சொத்தில் நான் எவ்வளவு கிரையம் பெற்றேன் என்றால் 1 ஏக்கர் 46 செண்ட்-ஐ நான் கிரையம் பெற்றேன். அதன் மொத்த விஸ்தீரணம் 2.19 ஆகும். அதில் ஒரு பகுதியை தான் பெற்றேன், மீதி இடம் உள்ளது என்றால் ஆமாம். பகுதி சொத்திற்கு தான் நான் உரிமை கோருகிறேன் என்றால் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு உரிமை கோருகிறேன். 18.11.2015 ல் நான் கிரையம் பெற்ற சொத்தை சிவமுருக ஆதித்யன் யாரிடம் பெற்றார் என்றால் தாமிரா கீரின் நிறுவனம். கிரையம் பெற்று ஏன் பட்டா மாற்றவில்லை என்றால் நான் சென்னையில் வசிப்பதால் அதற்கு முயற்சி செய்யவில்லை. நில ஆர்ஜிதம் செய்த பிறகு என்னை விசாரணைக்கு வரச் சொன்னார்களா என்றால் ஆமாம். பட்டா தாக்கல் செய்ய சொல்லி என்னிடம் கேட்கப்பட்டது. என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். சொத்து வாங்கியதிலிருந்து என்னுடைய அனுபவத்தில் தான் இருந்ததா என்றால் ஆமாம். பணம் கொடுக்கும் பட்சத்தில் மூன்றாவது நபர் யாரேனும் இந்த சொத்து சம்பந்தமாக உரிமை கோரினால் இழப்பீடு தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை.

**மறுவிசாரணை :**

இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.06.05 14:56:59 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**தூத்துக்குடி.**